**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு.R. பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.148/2025**

**[CNR No.TNMD240004172025]**

கலைச்செல்வி .......வாதி

/ எதிர் /

இராமன் .......பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 17.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.C.பாலச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை அனுப்பி அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைப்பட்ச…………

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பிரதிவாதி பிராது தொகை ரூ.1,46,972/– செலுத்த உத்தரவிடக்கோரியும், அசல் தொகையான ரூ.56,700ற்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பாணை நாள்வரை 12% வீதம் வருடவட்டியும் செலுத்த உத்தரவிடக்கோரியும், தவறும் பட்சத்தில் வழக்குச் சொத்துக்களைப் பற்றுவைப்பின்றி விற்பனைக்கு கொண்டு வந்து தாவாத் தொகையை வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**2. வாதி வழக்குரையின் சுருக்கம்:–**

பிரதிவாதி வாதியிடம் குடும்பச் செலவுக்காகவும், சில்லரைக் கடன்களைத் தீர்க்கவும், வாதியிடம் பிரதிவாதி கடந்த 23.06.2014ம் தேதி ரூ.56.700 கடன் பெற்றுள்ளார் என்றும், மேற்படி கடனுக்கு ஈடாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அவர் கைவசம் வைத்து அனுபவம் செய்துவரும் தாவா சொத்துக்களை பதிவு அடமான பத்திரம் மூலம் வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கடன் தொகை ரூ.56,700/–ற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1வீதம் வட்டியும், அசலும் சேர்த்து 3 வருட காலத்திற்கு பதிவு ஈடு பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும், வட்டியையோ, அசலையோ செலுத்தி ஈடு பத்திரத்தை செல்லுடன் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், தவறும் பட்சத்தில் பாக்கி ஏற்படும் வட்டியை அசலுடன் சேர்த்து கூடுதலாகும் அசல் வட்டிக்கு தவறிய தேதி முதல் மாதம் 1க்கு ரூ.100க்கு ரூ.1.25%வீதம் வட்டியுடன் செலுத்துவதாகவும் கூறியுள்ளார் என்றும், அதன்பின்னர் வாதியிடம் பிரதிவாதி பணம் கடனாக பெற்றுகொண்ட நாள்முதல் வட்டியை முறையாக செலுத்தவில்லை என்றும், வாதி பிரதிவாதியிடம் பலமுறை நேரில் பணம் திரும்ப செலுத்தக்கோரியும் பிரதிவாதி சாக்கு போக்கு சொல்லி பணம் திரும்பி செலுத்தாமல் காலம் கடத்தி வந்துள்ளார் என்றும், எனவே, வாதி பிரதிவாதி பெற்ற கடன்தொகையையும், வட்டியையும் திருப்பித் தரவேண்டும் என்று கடந்த 28.08.2024ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 31.08.2024ம் தேதியன்று பெற்றுக்கொண்ட பிரதிவாதி கடன் தொகையைச் செலுத்த முன்வரவில்லை மற்றும் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

**5. தீர்வுக்குரிய பிரச்சனை:**

வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? அல்லது இல்லையா?

**6. விவாதம் :**

**6(1)** வாதி தரப்பில் பிரதிவாதி குடும்பச் செலவுக்காகவும், சில்லரைக் கடன்களைத் தீர்க்கவும் எனக்கூறி வாதியிடம் 23.06.2014ம் தேதியன்று ரூ.56,700/– கடனாக கேட்டு பெற்று பதிவு அடமானப் பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், அந்த கடனிற்காக மாதம் 1 சதவீதம் வட்டி செலுத்தி 3 வருட காலத்திற்குள் திரும்பத் தந்துவிடுவதாகவும், தவறும் பட்சத்தில் தவறிய தேதி முதல் மாதம் 1க்கு ரூ.100/–க்கு ரூ.1.25% வீதம் வட்டி செலுத்துவதாகவும் உறுதியளித்தார் என்றும், வாதி பிரதிவாதியிடம் பணத்தைக் கேட்டபோது அசல் மற்றும் வட்டித்தொகையைப் பிரதிவாதி கொடுக்காமல் காலம் கடத்தியதால் வாதி தாவா வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே பிரதிவாதி வாதிக்கு அசல் ரூ.56,700 மற்றும் அதற்குண்டான வட்டி தொகையை 23.06.2014 முதல் 10.09.2025ம் தேதிவரை செலுத்தக் கடமைப்பட்டவர் என்று முன்வைக்கப்பட்டுள்ளது.

**6(2)** பிரதிவாதி வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்து வாதி தரப்பு கட்சியை மறுக்கவில்லை. மறுக்கப்படாத சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகவே கருதத்தக்கது என்ற இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 58ல்

கண்டவாறு இவ்வழக்கில் பிரதிவாதி வாதி தரப்பு வழக்கை ஒப்புக்கொள்வதாகவே அனுமானிக்க இயலுகிறது.

**6(3)** இருப்பினும், இவ்வழக்கில் வாதி வா.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டு பிராது சங்கதிகளுக்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சியமளித்து 23.06.2014ம் தேதி வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த ஈடு பத்திரம் அசல் வா.சா.ஆ.1ஆகவும், 28.08.2024ம் தேதி வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2ஆகவும், 31.09.2024ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.3ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6(4)** எனவே, மேற்கண்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் கவனமுடன் பரிசீலித்ததில் பிராது சங்கதிகளுக்கு உறுதிபடுத்தும் விதமாகவே உள்ளது. எனவே, வாதி தரப்பில் இவ்வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதால் வாதி கோரியபடி வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதி வாதிக்கு பிராது தொகை ரூ.1,46,972/- செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகையான ரூ.56,700/-ற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 12% வட்டியுடன் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் வழக்குச் சொத்துக்களைப் பற்றுவைப்பின்றி விற்பனைக்கு கொண்டு வந்து தாவாத் தொகையை வட்டியுடன் செலுத்த வேண்டும் என இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருகெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RENGANATHAN BARATHIRAJA
Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.25 04:05:49 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 கலைச்செல்வி

**வாதி தரப்பு சான்றாவணம்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.08.2023 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட் அசல் |
| வா.சா.ஆ.2 | 20.08.2025 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 20.08.2025 | அஞ்சலக ரசீது அசல் |
| வா.சா.ஆ.4 | 21.08.2025 | அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–**

–– இல்லை ––

RENGANATHAN BARATHIRAJA
Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.25 04:05:56 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.
அசல் வழக்கு எண்.148/2025
வரைவு / சீரான / தீர்ப்புரை
நாள்:-25.08.2026